
# இல்லம்
## செய்தி மடல்

VOLUME 1 ISSUE 2006/1 FEBRUARY 2006- MARCH 2006


## வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம்



திரு. செல்லையா பத்மநாதன்
திட்டப்பணிப்பாளர்

வடக்குக் கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் முதலாம் கட்ட நிறைவில் கிட்டிய வெற்றியுடன் இச்செய்திமடலின் மூலம் தங்களைச் சந்திக்க முன் வந்துள்ளேன். சமூகமேம்பாட்டுத் திட்டங்கள் பலவும் சமூகக்கட்டமைப்புகளை மீள்நிமாமாணம் செய்யும் பெரு நோக்குடன் அரசினாலும் அரசசார்பற்ற நிறுவனங்களினாலும் முன் எடுக்கப்பட்டுவருகின்றன. அவ்வகையில் வீடமைப்பில் தன் பங்களிப்பினைச் செய்து வருகின்ற வ.கி.வீ.மீ.தி. குறித்த சிறு விளக்கத்தைத் தங்களுக்குச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்..

2005, மார்ச் மாதம் 15 ஆந் திகதி, இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேசஅபிவிருத்தி நிறுவனத்திற்கும் (IDA) இடையில் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்திற்கு அமைவாக உலக வங்கி 75 மில்லியன் அமெரிக்க டொலர் பணத்தினை நிதியுதவியாக வீடமைப்பு மீள் நிர்மாணத்திற்காக வழங்கியது. இலங்கை அரசாங்கம் தனது பங்காகத் தனது திரட்டு நிதியிலிருந்து இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியது. இந்த 77 அமெரிக்க மில்லியன் டொலர் நிதியுதவியுடன் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர் மாணத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் முதலாம் கட்டத்தில் 4,904 வீடுகள் மீள் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் எண்ணக்கரு மிக எளிமையானது. இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு "முற்றாக அழிவுற்ற வீடுகள்", "பகுதியாக அழிவுற்ற வீடுகள்" என இருவகையான வீடமைப்பு நிதி மானியம் வழங்கப்பட்டன.. முற்றாக அழிவுற்றதாக மதிப்பீடு செய்யப்படும் வீட்டின் உரிமையாளருக்கு ரூபா இரண்டரை இலட்சம் நான்கு தவணைகளில் வழங்கப்பட்டது. பகுதியாக அழிவுற்றதாக மதிப்பீடு செய்யப்படும் வீட்டுரிமையாளருக்கு ரூபா ஒரு இலட்சமும் இரண்டு தவணைகளில் நிதிமானியம் வழங்கப்பட்டது. இவ்வகையில் முதலாம் கட்டத்தில் 4,478 முற்றாக அழிந்த வீடுகளும், 426 பகுதியாக அழிந்த வீடுகளும் தெரிவு செய்யப்பட்டு பூரணமாக மீள் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன. இவை யாவும் "வீட்டுடைமையாளர் நிர்மாணச் செயற்றிட்டம்" (Home Owner Driven Programme) எனும் மையக்கருவை நடை முறைப்படுத்திய திட்டமாகும்.

இந்த வீடமைப்புத் திட்டத்தின் முதலாம் கட்டத் தெரிவில் பலர் தவிர்க்கப்பட்டிருக்கலாம். ஆனால் இத்திட்டம் 2005 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரை நான்கு ஆண்டுகள் தொடரும் செயற்றிட்டமாகும். மொத்தமாக 31,270 வீடுகள் இத் திட்டத்தின் கீழ் மீள்நிர்மாணம் செய்யப்படவுள்ளன. இத்திட்டம் வடக்கு கிழக்கு மாகாணத்தின் எட்டு மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தினைச் செயற்படுத்துவதற்காக எட்டு மாவட்டங்களிலும் கிராமிய, பிரதேச, மாவட்ட மட்டங்களில் நிர்வாகக் கட்டமைப்புகள் ஏற்படுத்திச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

அனைவரும் ஒன்றிணைந்து வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தினை முன்னெடுக்க ஒத்துழைப்பு வழங்குமாறு அழைக்கின்றேன். கடந்த இரு தசாப்த யுத்தத்தின் காரணமாகவும் அண்மைய சுனாமி காரணமாகவும் அழிவுற்ற எம் சமூகக் கட்டமைப்புகளில் முதன்மையான இல்லத்தினை முன்னரிலும் மேம்பாடாக உருவாக்குவோம்.




### இலங்கைக்கான உலக வங்கி பணிப்பாளரின் பாரட்டு



" வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்தின் முதலாம் கட்டம் சிறந்த பெறுபேற்றை அடைந்துள்ளமையை குறிப்பிடுவதில் மகழ்ச்சி அடைகின்றேன்......"

பீற்றர் கரோல்ட்
இலங்கைக்கான. உலக வங்கி பணிப்பாளர்
30.12.2005

**NORTH-EAST HOUSING RECONSTRUCTION PROGRAMME(NEHRP)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லம்
## செய்தி மடல்

VOLUME 1 ISSUE 2006/1 FEBRUARY 2006- MARCH 2006



வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம்

தொடர்புகளுக்கு................

தலைமை அலுவலகம் (NEHRU)

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம்
பிரதம செயலாளரின் செயலகம்,
உட்துறைமுக வீதி
திருகோணமலை.

தொலைபேசி இல:

திட்டப்பணிப்பாளர் : 026 – 2224853
அலுவலகம்: 026 – 2227161
தொலைநகல்: 026 – 2224854
மின்னஞ்சல் pdnehrp@sltnet.lk

மாவட்ட அலுவலகங்கள்:

1.பிரதி திட்டப்பணிப்பாளர்
வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம்
1/A பிரதான வீதி, அட்டாளச்சேனை, அம்பாறை.
தொலைபேசி இல: 067-2279285

2.பிரதி திட்டப்பணிப்பாளர்
வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம்
புதிய கல்முனை வீதி, மட்டக்களப்பு.
தொலைபேசி இல: 065-2227263

3.பிரதி திட்டப்பணிப்பாளர்
வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம்
மாவட்டச் செயலகம், திருகோணமலை..
தொலைபேசி இல: 026-2225985

4.பிரதி திட்டப்பணிப்பாளர்
வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம்
மாவட்டச் செயலகம், வவுனியா
. தொலைபேசி இல: 024-2223647

5.பிரதி திட்டப்பணிப்பாளர்
வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம்
மாவட்டச் செயலகம், மன்னார்.
தொலைபேசி இல: 023-2250668

6.பிரதி திட்டப்பணிப்பாளர்
வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம்
மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு
. தொலைபேசி இல: 021-2228944

7.பிரதி திட்டப்பணிப்பாளர்
வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம்
மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.
தொலைபேசி இல: 021-2283966

8.பிரதி திட்டப்பணிப்பாளர்
வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம்
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: 021-2228028




## பிரதம செயலாளரின் செய்தி.

ஏற்கனவே அபிவிருத்தியில் பின் தங்கியிருந்த வடக்கு கிழக்கு மாகாணம் 20 வருடங்களாக நடந்த யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலை தாக்கத்தினாலும் மேலும் பாரிய பாதிப்படைந்து இன்று இலங்கையில் குறைந்த வளர்ச்சி வீதத்தைக் கொண்ட மாகாணமாக உள்ளது. இம் மாகாண மக்களின் வாழ்க்கைத்தரத்தை, அடிப்படை உட்கட்டுமானத்தை மீள கட்டியெழுப்பி நாட்டின் மற்றைய பகுதி மக்களுடன் சமமான நிலைமைக்கு கொண்டு வருதல் ஓர் இலட்சியமாகும். அதனை அடைவதற்கு மூலவள தட்டுப்பாடு மாத்திரமல்ல மற்றும் பல செயற்பாட்டு தடைகளை நீக்கி மீள்புனர்நிர்மாண அபிவிருத்தி நன்மைகளை ஏற்று அதனை தொடர்ச்சியாக பேணி பாதுகாக்கின்ற உட்சூழலும் வெளிச்சூழலும் மாகாணத்தில் உருவாக்கப்பட வேண்டிய தேவை முக்கியமானதென உணரப்பட்டுள்ளது.

இச்செயற்பாட்டின் ஆரம்பமாக பல நிதி வழங்கும் நிறுவனங்களின் உதவியுடன் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் உலக வங்கியின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்பட்டு வரும் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தில் யுத்தத்தினால் பாதிப்படைந்து தமது வீடுகளை இழந்த குடும்பங்களில் 31,270 நலிவடைந்த குடும்பங்களுக்கு உரிமையாளர்களே தமது வீடுகளை மீள்நிர்மாணம் செய்யும் திட்ட நடைமுறையின் கீழ் 2005 ம் வருடத்தில் கட்டி முடிக்கப்பட்ட 4904 வீடுகளை நிர்மாணித்த வெற்றியுடன் இத்திட்டம் தொடர்பான செய்திகளை வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ளவர்களுக்கு மாத்திரமல்லது அனைவருக்கும் தெரிவிக்கும் நோக்கில் வெளியிடப்படும் "இல்லம்" என்ற செய்திமடலுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

சி.ரங்கராஜா.
பிரதம செயலாளர்.
வடக்கு கிழக்கு மாகாணம்.
திருகோணமலை.

வடக்கு கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டம் 03 செயல்திட்டங்களைக் கொண்டது. அவையாவன.

1)31,270 வீடுகள் மீள்நிர்மாணம் செய்தல்.
ஒதுக்கப்பட்ட நிதி: ரூபா 7700 மில்லியன்.

2)வடக்கு கிழக்கு மாகாணத்தின் செயற்படுத்தப்படாது இருந்த அரச காணி உரிமை தொடர்பான தோக்க நிலையை நிவர்த்தி செய்து தகுதியானவர்களுக்கு காணியுரிமைப் பத்திரங்களை வழங்கல்.

3)கிராமங்களிலுள்ள இளைஞர் யுவதிகளுக்கு கட்டிட நிர்மாணத் துறையில் பயிற்சி அளித்தல் என்பனவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கொரு வீடு



**எனக்கொரு வீடு வேண்டும். நான் யாது செய்ய வேண்டும்?**

நீங்கள் இந்த வீடமைப்புத்திட்டத்தின் ஒரு பயனாளியாக வேண்டுமாயின் முதலில் அதற்கான தகுதியடையவராக இருக்கவேண்டும். சமூக மட்டத்தில் மிகவும் வறிய, நலிவுற்ற குடம்பங்களையே இத்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் பயனாளியளாகத் தெரிந்து வீட்டு வசதி வழங்கியுள்ளோம். உங்கள் வீடு யுத்தத்தினால் முற்றாகவோ பகுதியாகவோ சேதமுற்றதாக இருக்க வேண்டும். நீங்களும் உங்கள் குடும்ப அங்கத்தவர்களும் உங்களது கிராமத்தில் மீளக்குடி யேறியிருக்க வேண்டும். உங்களது குடும்ப மாத வருமானம் 2500 ரூபாவிற்குக் குறைவாக இருக்க வேண்டும். நீங்கள் குடியேறியுள்ள காணி உங்களுடையதாகவும் அக்காணி தொடர்பான ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆவணங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

**எனது குடும்பத்தில் எட்டு அங்கத்தவர்கள் உள்ளனர். நானும் எனது மனைவியும் பாடசாலை செல்கின்ற ஆறு பிள்ளைகளும். உள்ளனர். எனது மாதாந்த வருமானம் உண்மையைச் சொல்வதானால் 4000 ரூபாவாகும். எனக்கு வீடு கிடையாதா?**

எமது வீட்டுத்திடடத்தின் முதலாம் கட்டத்தில் 2500 ரூபாவிற்கு மேல் மாத வருமானம் உள்ள வர்கள் தெரிவாகவில்லை. ஆனால் வீடமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் தெரிவாக வுள்ளனர். எட்டு அங்கத்தவரைக் கொண்ட, 4000 ரூபா வருமானம் பெறும்
நீங்கள் வீடு பெறத் தகுதியாகவரே. ஏனெனில் குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை 5 க்கு மேற்பட்டிருப்பின் ஒவ்வொரு அங்கத்தவரது தலா வருமானம் 500 க்குக் குறைவெனக் கணிக்கப்படும்.

**நான் வீடு பெறுவதற்கு இன்னொரு பிரச்சினை தடையாகவுள்ளது. நான் வசிக்கும் கிராமம் உங்களது கிராமத்தெரிவில் அடங்கவில்லை. ஆனால் எனது வீடு யுத்தத்தினால் பாதிப்படைந்துள்ளது. அந்தக்கிராமத்தில் என் வீட்டின் மேல்தான் குண்டு வீழ்ந்தது. இரண்டு வீடுகள் தாம் பாதிப்புற்றன. எனக்கு வீடு கிடைக்க வழியில்லை என நினைக்கிறேன்?**

ஏன் அப்படி நினைக்கிறீர்கள்? நீங்களும் வீடு பெறத்தகுதியானவரே. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கப்படுகின்ற மொத்த வீடுகளில் 10 சதவீத மானவை மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஆயினும் கிராமத் தெரிவு அட்டவணையில் உள்ளடங்காத பகுதிகளுக்கு ஒதுக்கப் பட்டுள்ளது.

**நான் யாது செய்ய வேண்டும்?**

உங்கள் கிராமசேவையாளரை அல்லது பிரதே சச்செயலாளரை உடன் சந்தியுங்கள். உங்கள் தகுதிநிலையை எடுத்துரையுங்கள். உங்களது தகுதி நிலை சரியாயின் 10 % ஒதுக்கீட்டில் நீங்களும் தெரிவாவீர்கள்.


**எனக்குத் தகுதியிருந்தும் தெரிவாகாவிட்டால் யாது செய்ய வேண்டும்?**

உடன் உங்களது முறைப்பாட்டினை எழுத்தி லிட்டோ அல்லது வாய் மூலமோ பிரதேசச் செயலரிடம் முறைப்பாடு செய்யுங்கள். பிரதேச மட்டத்தில் தீர்வு கிட்டாவிட்டால் தயங்காது மாவட்ட மட்டத்தில் அரசாங்க அதிபருக்கு விண்ணப் பியுங்கள். அரசாங்க அதிபரின் முடிவில் திருப்திப் படாதவிடத்து மாகாண மட்டத்தில் பிரதம செயளாளருக்கு விண்ணப்பிக்கலாம். எல்லா மட்டத்திலும் உங்களது முறைப்பாட்டினைப் பதிவு செய்ய விசே' அலுவலர் உள்ளனர்.

**எனது உறவினருக்குச் சகல தகுதிகள் இருந்தும் தனது காணியுரிமையை நிருபிக்கும் ஆவணங்கள் கைவசமில்லை. என்ன செய்வது?**

காணி சம்பந்தமான இடர்ப்பாடுகளைத் தீர்ப்பதறகு ஓர் பிரத்தியேகக் காணிக்குழு நியமிக் கப்பட்டு இயங்கி வருகின்றது. உங்களது காணி உறுதிக்காணியாயின் அதன் தொலைந்த பிரதியை மீளப் பெற அக்குழு உதவும். அரச காணியாயின் காணி உத்தரவுப் பத்திரத்தைப் பெற அக்குழு உதவும். வேறு பிரச்சினைகளுக்கும் அவர்களிடம் ஆலோசனை பெறலாம்.

**வீட்டு மானியம் பெறத் தேவையான தகுதிகள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குக் கிழக்கை உலுக்கிய அனர்த்தங்கள்

## யுத்த அனர்த்தம்

பூமிப்பந்தெங்கும் நிகழும் இயற்கையான அனர்த்தங்களோடு மனிதரினால் தோற்றுவிக்கப்படும் அனர்த்தங்களும் மனித குலத்தினைக் காவு கொண்டு வருகின்றன. கடந்த காலங்களில் இலங்கை அரசிற்கும் தமிழீழவிடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தினால் வடக்குக் கிழக்கு மாவட்டங்களின் மானிட வாழ்க்கை சீர்குலைந்தது. வீடுகள் உட்படக் கட்டுமானங்கள் அழிவுற்றன. பெறுமதிமிக்க உயிர்கள் பலியாகின.

யுத்தத்தின் காரணமாக வடக்குக்கிழக்கில் 290,615 வீடுகள் முற்றாகவோ பகுதியாகவோ சேதமடைந்தன. 160,754 குடும்பங்கள் (498,084 மக்கள்) தமது சொந்த இடங்களைக் கைவிட்டு அகதிகளாக இடம் பெயர்ந்தோடினர்.




இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 2002, பெப்ரவரி மாதம் யுத்தநிறுத்திற்கும் சமாதானத்திற்குமான உடன்பாடு ஏற்பட்டது. அதன் பின்னர் 102,100 குடும்பங்கள் (391,167 மக்கள்) தமது அகதி வாழ்வை நிறைவு செய்து தமதிடங்களுக்குத் திரும்பி வந்தனர். அவர்களுக்கு ஆதார வசதிகளை வழங்குகின்ற கடமை அனைத்து நிறுவனங்களுக்கும் ஏற்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் கடந்த இரு தசாப்தங்களாக நிலவிய உள்நாட்டு முரண்பாடுகளால் பாதிப்படைந்த பிரதேசங்களை மீள் கட்டுமானம் செய்யவும் புனருத்தாரணம் செய்யவும் உருவாக்கப்பட்ட நிறுவனமே வடக்கு கிழக்கு வீடமைப்புப் **மீள்நிர்மாணத் திட்டமாகும் (NEHRP). இத்திட்டத்தின்** கீழ் 31,270 வீடுகள் புனருத் தாரணம் செய்வதற்குத் தெரிவாகியுள்ளன.

## சுனாமி அனர்த்தம்

2004ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ம் திகதி இலங்கையின் வடக்குக் கிழக்கு மாவட்டக் கரையோரங்களை சுமாத்திரா சுனாமி தாக்கியது. இதனால் 38,395 பேர் சுனாமிக்குப் பலியானார்கள். 14,521 பேர் காணாமல் போயுள்ளனர். சுனாமித் தாக்கத்தினால் கடலோர வதிவிடங்களில் 99% மானவை தகர்ந்து இடிந்து விழுந்துள்ளன. கரையோரங்களில் அமைந்திருந்த பொதுக்கட்டடங்கள் அரச கட்டிடங்கள் உல்லாசப் பயனிகளின் ஹோட்டல்கள் என அனைத்தும் தாக்குப்பிடிக்கமுடியாது அழிந்து போய் விட்டன. வடக்குக்கிழக்கு பிரதேசத்தில் 89,935வீடுகள் சேதமுற்றுள்ளனவென அறியமுடிகின்றது.

### வடக்குக் கிழக்கில் சேதமுற்ற வீடுகள்

| மாவட்டம் | சேதமுற்றவீடுகள் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 5667 |
| முல்லைத்தீவு | 8101 |
| திருகோணமலை | 10911 |
| மட்டக்களப்பு | 34427 |
| அம்பாறை | 30541 |
| மொத்தம் | 89935 |

இவ்வாறு அழிவுற்ற வீடுகளில் மீள அமைத்துக் கொடுப்பதில் சர்வதேச தொண்டு நிறுவணங்கள் பலவும் முன்வந்துள்ளன, அவ்வகையில் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் இரண்டாவது செயற் திட்டமாக மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய நான்கு மாவட்டங்களில் சுனாமியால் அழிவுற்ற வீடுகளில் 31506 வதிவிடங்களை மீள அமைத்துக் கொடுப்பதற்கு வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணப் பிரிவு (NEHRU) முன்வந்துள்ளது. இவ்வகையில் 18179 முழுமையாக அழிந்த வீடுகளும், 13322 பகுதியாக அழிந்த வீடுகளும் மீள் நிர்மாணம் செய்யப்படவுள்ளன.

## மாவட்டம் மீள் நிர்மாணத்துக்குரிய வீடுகளின் எண்ணிக்கை


| மாவட்டம் | மீள்நிர்மாணத்துக்குரிய வீடுகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | முழுமையாக | பகுதியாக | மொத்தம் |
| 01 மட்டக்களப்பு | 8,802 | 4,697 | 13,499 |
| 02 அம்பாறை | 3,523 | 6,373 | 9,896 |
| 03 யாழ்ப்பாணம் | 2,497 | 2,252 | 4,749 |
| 04 முல்லைத்தீவு | 3,357 | ------ | 3,357 |
| மொத்தம் | 18,179 | 13,322 | 31,501 |

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணப்பிரிவு இரண்டு செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளது.

செயற்றிட்டம் I- யுத்தத்தினால் அழிவுற்ற வீடுகளில் 31270 வீடுகளை நான்கு வருட காலத்துள் புனருத்தாரனம் செய்து கொடுத்தல்

செயற்றிட்டம் II- நான்கு மாவட்டங்களில் 15 பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளில் 31,501 வீடுகளை மீளமைத்துக் கொடுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






யுத்த அழிவு ↑

சுனாமி அழிவு →



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழையதும் புதியதும்

வடக்கு-கிழக்கு மாகாண மக்கள் தமக்கென ஒவ்வொரு இல்லத்தை அமைத்துக் கொண்டு கௌரவமாயும் பாதுகாப்பாயும் தமது குடும்ப நலன் பேனி வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அதனால் இப்பிரதேசத்தில் ஏற்பட்ட யுத்த அனர்த்தத்தினால் தமது வாழ்விடங்களை விட்டு அகதிகளாக இடம் பெயர்ந்து அலைந்து மீண்டும் தமது இடங்களுக்கு திரும்பிவந்திருக்கிறார்கள். பலர் முன்னரேய வசதியான கல்வீடுகளில் வாழ்ந்தவர்கள் திரும்பி வந்த போது அவர்களுடைய காணிகளில் உயர்ந்திருந்த மனைகளுக்குப் பதிலாக கற்குவைகளே எஞ்சியிருந்தன. ஓரளவு நிலையான வீடுகளிலும் மண்வீடுகளிலும் வாழ்ந்த ஒரு பகுதியினர் திரும்பி வந்தபோது அவர்களுடைய காணிகளில் எதுவுமே எஞ்சியிருக்கவில்லை. இந்த நிலையில் தமது காணிகளில் தற்காலிக குடிசைகளை அமைத்துக் கொண்டு வாழ்பவர்களாகவும், நலம்புரி நிலையங்களில் தங்கி வாழ்பவர்களாகவும் மாறியிருந்தனர், இந்த நிலையில் அம்மக்களது இருப்பிடங்களை முன்னர் போலவும் முன்னரிலும் சிறப்பானதாகவும் அமைத்துக் கொடுக்கின்ற பணியே வடக்குக் கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணப்பிரிவு உலக வங்கியின் உதவியுடன் முன்னெடுத்துள்ளது. பழைய குடிசைகளில் பல்வேறு துயரங்களோடு வாழ்ந்த அம்மக்களுக்கு புதிய வீடுகள் புதியதொரு சமூக வாழ்க்கையை உருவாக்கியுள்ளன.




இப்படியொரு அற்புதமான வீடு எனது குடும்பத்துக்கு கிடைக்கும் என நான் எண்ணியிருக்கவில்லை யுத்தத்தினால் எனது வீடு தரைமட்டம் ஆகியது, நானும் குடும்பத்தினரும் இடம் பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்து திரும்பி வந்தோம். வந்த எங்களை இத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்து இப்படியான நிரந்தர வீடென்றை கட்டி குடியேற வாய்ப்பளித்த வடக்கு-கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணப் பிரிவினருக்கு நன்றியுடையோம்.
திரு. சி. ஜெயபாலன்.



"இது எங்களது வீடு கணவனை இழந்த எனக்கு இவ்வாறான வசதிகள் கொண்ட இல்லம் கிடைக்கும் என நாங்கள் கனவிலும் எண்ணி இக்கவில்லை, இந்த வீட்டின் ஒவ்வொரு கட்டமைப்பு நிலையிலும் எங்களது பங்களிப்பு இருக்கின்றது. வசதியான இந்த வீடு எனது பிள்ளைகளை கல்வி கற்பித்து சிறந்த கல்விமான்களாக உருவாக்க உதவும் என நான் நம்புகின்றேன். இந்த வீட்டை வழங்கிய உலக வங்கிக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.
திருமதி. எஸ். கவிதா




நாங்கள் குடியேறிவாழ்ந்த பழைய குடிசைவீட்டையும் புதிதாக கட்டிய இக்கல்வீட்டையும் ஒப்பிட்டு பார்க்கும் போது நாங்கள் எவ்வளவு அதிஸ்டசாலிகள் என்பது தெரிகிறது. நானும் கணவரும் நான்கு பிள்ளைகளும் ஒரு சிறிய குடிசை வீட்டுக்குள் சீவித்தோம், எனது குழந்தைகளின் கல்வி பாதிப்படைந்தது சுகநலத்தில் கூட அவர்கள் பாதிப்புற்றிருந்தனர். இன்று புதிதாக கட்டிய இவ்வீட்டில் குடியேறியபோது மிகுந்த மகிழ்ச்சியும் மற்றவர்களுக்கு சமமாக வாழ்கின்ற உணர்வும் ஏற்பட்டுள்ளன.



"ஐந்து பிள்ளைகளுடன் நானும் மனைவியும் சிறியதொரு மண் குடிசையில் இது வரை வாழ்ந்தோம், நிம்மதியாக உறங்கக் கூட அந்தக் குடிசையில் இடம் இருக்கவில்லை ஆனால் இன்று எம்மால் உலக வங்கியின் உதவியுடன் நிறுவப்பட்டிருக்கின்ற இப்புதியவீடு வாழ்க்கையில் நம்பிக்கையையும் பிடிப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது."
திரு. ரி.மார்க்கண்டு.

## உலகவங்கியின் சிரேஷ்ட வீடமைப்பு ஆலோசகர் கலாநிதி.நாராயணன் எடாடன்

உலக வங்கியின் சிரேஷ்ட வீடமைப்பு ஆலோசகர் கலாநிதி நாராயணன் எடாடன் அவர்கள் யாழ் மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டங்களை பார்வையிடுகின்றார், அத்துடன் யாழ் மாவட்டத்தின் வீடமைப்பு அதிகாரிகள் காணப்படுகின்றனர். யாழ் மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் திரு.வே.சாம்பசிவம், திட்டத்தின் செயற்பாடுகளை கலாநிதி நாராயணனுக்கு விபரிக்கின்றார். வடக்கு கிழக்கு மாகாணத்தின் எட்டு மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும் வீடமைப்பு மீள்நிர்மாண திட்டத்தினை இவர்களோடு உலக வங்கியைச்சார்ந்த திரு.நரேஸ் துரைச்சாமி, அஸ்ரா ஒலிசென், சித்தே ஹுடியன், சொறோயா ஹோகா, நதீரா ராஜபக்ஷ ஆகியோரும் பார்வையிட்டு உரிய ஆலோசனைகளை வழங்கியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வீட்டுடைமையாளர் தனது வீட்டை நிர்மணித்தல்



தன் முயற்சி



தன் திருப்தி



வாழ்க்கைதரம் மேம்பாடு



வாழக்கை முறைமை மாற்றம்



குழுவாக இணைதல்



குழுவாக செயற்படல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடமைப்புத் திட்டத்தில் பெண் தலைமைத்துவம்

இலங்கைச் சமூகம் பாரம்பரியமாக பெண்களுக்கான சம உரிமை மறுக்கப்பட்டு ஆணாதிக்க சமூகமாக விளங்கிவந்துள்ளது. பொதுவாக பெண்கள் பொருளாதார ரீதியாகவும் கல்வி அரசியல் ரீதியாகவும் நாளாந்த வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்திலும், ஆண்களிலும் பார்க்க தகுதி நிலை குறைந்தவர்களாக காணப்படுகின்றனர். நவீன இலங்கையில் கல்வி மருத்துவம் அரசியல் என்பவற்றில் ஓரளவு பெண்களின் பங்களிப்பு முக்கியத்துவம் பெற்றிருக்கின்ற போதிலும் முழுமையாக அவர்கள் ஆண்களுக்கு நிகராக சமஉரிமை கொண்டவர்களாக இல்லை. இவ்வாறான நிலை வடக்குக் கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாண திட்டப்பகுதிகளிலும் காணப்படுகின்றது. எனினும் இத்திட்டம் பெண்களினுடைய உரிமையை பல விதங்களில் வலியுறுத்துவதாகவும் அவர்களுடைய தலைமைத்துவ பண்பை உயர்த்துவதாகவும் விளங்குகின்றது. இத்திட்டத்தில் 40மூ பெண்கள் கல்வி அறிவு அரிதானவர்களாக உள்ளனர். ஆக 8மூ பெண்களே க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்தவர்களாக உள்ளனர். இங்குள்ள பெண்கள் பெரும்பாலும் வீட்டு மனைவியராயும், கமத்தொழில், கடற்றொலில், கூலியராயும் விளங்குகின்றனர். ஒரு வகையில் கூலிபெறாத வீட்டுப்பணியாளராகவும் உள்ளனர். எனினும் இந்த வீடமைப்புத்திட்டத்தில் பெண்களுக்காண தலைமைத்துவப் பண்புகள் ஊக்குவிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

1. கணவனும் மனைவியும் சேர்ந்து வீட்டின் வடிவத்தை தீர்மானிப்பவராக காணப்படுகின்றனர்.

2. வங்கிக் கண்க்கு கணவனதும் மனைவியினதும் கூட்டு கணக்காக இருக்கின்றது.


3. இந்த வீடமைப்பு சம்பந்தமாக வழங்கப்படுகின்ற ஆவணங்கள் அனைத்தும் கணவனதும் மனைவியினதும் கூட்டுப் பொறுப்பை பேணும் வகையில் வழங்கப்படுகின்றன. உதாரணமாக: வழங்கப்படுகின்ற புதிய காணி உறுதிகளும், காணி உத்தரவுப்பத்திரங்களும் இருவரினதும் பெயர்களிலேயே பதிவு செய்து வழங்கப்படுகின்றன.

4. வீடமைப்பில் பெண்கள் கூடுதலாக பங்கேற்பதைக் காணமுடிகின்றது. வங்கிக்குச் சென்று பணத்தை கணக்கில் இருந்து மீளப்பெறல் கடைகளுக்குச் சென்று கட்டிடப் பொருட்களை கொள்வனவு செய்தல் என்பனவற்றில் பெண்கள் கூடுதலாக ஈடுபடுவதைக் காணமுடிகின்றது.

5. கிராமிய புனர்நிர்மாணக் குழுக்களில் 40 வீதமானோர் பெண்களாக உள்ளனர். கொழும்புத்துறை (யாழ்ப்பாணம்), பழையவூர் (வவுனியா) என்பனவற்றின் கிராமிய புனர் நிர்மாணக் குழுக்களின் தலைமைத்துவத்தினை பெண்களே ஏற்று பெரும் சாதனை படைத்துள்ளனர்.

எனவே வடக்குக் கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாண திட்டமானது பெண்களது உள்ளார்ந்த வளத்தையும் சக்தியையும் வெளிக்கொணர்ந்து ஆண்களுக்கு நிகரான செயற்பாடுகளில் திறனுடன் பங்குகொள்ளவும் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்கவும் வழிவகுத்துள்ளது.

## வடக்குக் கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்தின் கீழ் வீடுகளின் எண்ணிக்கை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org